இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 87 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 20 – வெள்ளிக்கிழமை 06 நவம்பர் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 87 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 20 - Friday 06 November 2026 - Dak 8 Pages ₹ 5.00



கோயம்புத்தூர் – வ.உ.சி. மைதானத்தில், திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற, "பெரியார் அறிவுலகம் கண்ட திராவிட நாயகருக்கு நன்றி பாராட்டு விழா"வில் நேற்று முன்தினம் (04-11-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிவு வழங்கினார். இதில் முன்னாள் அமைச்சர்களும், திராவிடர் கழக நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

மிரட்டலுக்குப் பயந்து தி.மு.க. பின்வாங்கிய வரலாறே கிடையாது!

பெரியார் அறிவுலகம், தமிழ்நாட்டின் அடையாளம் !

கோவையில் – திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில்

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!



கோவை, நவ.6-

மிரட்டலுக்கு பயந்து தி.மு.க. பின் வாங்கிய வரலாறே கிடையாது! என்றும், பெரியார் அறிவுலகம் தமிழ்நாட்டின் அடையாளம்! என்றும், கோவையில் – திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் – வ.உ.சி. மைதானத்தில், திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற, "பெரியார் அறிவுலகம் கண்ட திராவிட நாயகருக்கு நன்றி பாராட்டு விழா"வில் நேற்று முன்தினம் (04-11-2026), ஆற்றிய உரை வருமாறு:-



வந்ததிலிருந்து ஒரு மணிநேரமாக, நான் ஒருவிதமான மகிழ்ச்சியும் கூச்சமும் கலந்த மனநிலையில் அமர்ந்திருந்தேன். அந்த அளவிற்குப் பாராட்டித் தள்ளி விட்டீர்கள்! உணர்ச்சிப்பெருக்கோடு நிற்கிறேன். என்ன பேசுவது என்று தெரியாத நிலையில் நின்று கொண்டிருக்கிறேன். அதிலும், நம் மானமிகு ஆசிரியர் அவர்கள், பாராட்டோடு சேர்த்து அன்பையும் பாசத்தையும் பொழிந்திருக்கிறார்! குழந்தைக்கு எப்படித் தாயின் முத்தமோ, அதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தாய்க் கழகத்தின் அன்பு முத்தம் இது!

நம் திராவிட மாடல் ஆட்சியில் செய்த சாதனைக்காகப் பாராட்டிய தாக எடுத்துக்கொள்வதை விட, இன்னும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று வழங்கப்பட்ட ஊக்கமாகவே இந்த விழாவை எடுத்துக்கொள்கிறேன். அதற்குத் தகுதியுள்ளவனாக என்னை மேலும் வளர்த்துக் கொள்வேன் என்று உங்களுக்கு முதலில் உறுதி தருகிறேன்.

அறிவுப் புரட்சியின் அடையாளமாக நூலகங்கள்!

அறிவுப் புரட்சியின் அடையாளமாக விளங்கும் ஏராளமான நூலகங்களை தி.மு.க. ஆட்சிக் காலங்களில் அமைத்திருக்கிறோம். அதில் முக்கிய மானதாக, கோவையின் புதிய அடையாளமாகப் 'பெரியார் அறிவுலகம்' கம்பீரமாக நிற்கிறது! அப்படிப்பட்ட பெரியார் அறிவுலகத்தை உருவாக்கியதற்காகப் பாராட்டு விழா நடத்தப்போகிறோம் என்று, நம்முடைய மானமிகு அய்யா ஆசிரியர் அவர்கள் அழைத்தார். மன்னிக்க வேண்டும், உத்தரவிட்டார். அய்யா ஆசிரியர் அழைத்து, நான் வராமல் இருக்க முடியுமா? நாம் செல்ல வேண்டிய பாதையைத் தீர்மானிப்பதே பெரியார் திடல்தான் என்று சொன்னவன் நான்!

தந்தை பெரியாருக்குப் பிறகு – அன்னை மணியம்மையாருக்குப் பிறகு – பெரியார் கொள்கையை மலைபோல் காத்து வருபவர்தான், நம் ஆசிரியர் அவர்கள்! இன்னும் சொல்லவேண்டுமென்றால், என்னையும் காத்தவர் ஆசிரியர் தான்! ஓராண்டு காலம் மிசா சிறைவாசத்தில் அவர் பாதுகாப்பில்தான் நான் இருந்தேன். ஏன், இப்போதும் நம்மை வீழ்த்த, என் மீது வீசப்படும் அவதூறுகளுக்கு, ஆதாரங்களோடு தக்க பதிலடி தந்து, அறிக்கைகள் வெளியிட்டு, அந்த விமர்சனத் தாக்குதல்களை முறியடிக்கும் முதல் நபர் யார் என்று

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம்

மீனவர்கள் கடும் எதிர்ப்பு!

2-வது முறையாக கூட்டம் ஒத்தி வைப்பு!

சென்னை, நவ.6-

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பான கருத்துக்கேட்பு கூட்டம் என்பது வெறும் கண்துடைப்பு என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், 2வது முறையாக கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

கடும் எதிர்ப்பையும் மீறி, சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட த.வெ.க. அரசு தன்னிச்சையாக முடிவு செய்துள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட இடத்தில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை இடிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தங்கள் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்கில் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட முற்பட்டால் மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பான கருத்துக்கேட்பு கூட்டம் என்பது வெறும் கண்துடைப்பு என்று குற்றஞ்சாட்டி மீனவர் சங்கங்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், புதிய தலைமைச்செயலகம் கட்டுவதற்கான கருத்துக்கேட்பு கூட்டம் 2வது முறையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த செவ்வாய்க்கிழமை கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு, மீனவர்களின் எதிர்ப்பால் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீண்டும் தள்ளிவைக்கப் பட்டுள்ளது. பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் வராது என செய்தியை பரப்பிவிட்டு தலைமைச் செயலகம் கட்ட அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் பேச்சுகள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகவும் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

'தூயசக்தி' விஜய் ஆட்சியில்

இலவச சைக்கிள் டெண்டரிலும் மெகா ஊழல்!

சைக்கிள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கூடுதல் விலை ஏன்?

சென்னை, நவ.6-

பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்குவதற்கு த.வெ.க. அரசு வெளியிட்ட டெண்டரில் மிகப் பெரிய ஊழல் நடந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதுச்சேரி அரசு மாணவர்களுக்கான விலையில்லா சைக்கிள் குறைந்த விலையில் கொள்முதல் செய்ய டெண்டர்விட்டது. குறைந்த விலை கொடுக்க முன்னணி சைக்கிள் நிறுவனம் டெண்டர் கோரியுள்ளது. வெறும் எட்டாயிரத்து 861 சைக்கிள் வாங்கும் புதுச்சேரி அரசுக்கே ஒரு சைக்கிள் 6,248 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. ஆனால், 5.32 லட்சம் சைக்கிள்களை தமிழ்நாடு அரசு வாங்க உள்ளது.

புதுச்சேரியை விட 60 மடங்கு அதிக எண்ணிக்கையில் சைக்கிள் வாங்கும் தமிழ்நாட்டுக்கு அதை விட குறைந்த விலைக்கு கிடைக்க வேண்டும். மாறாக ஒரு சைக்கிள் 7,235 முதல் 7,476 ரூபாய்க்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் டெண்டர் எடுத்துள்ளது. புதுச்சேரியை விட தமிழ்நாட்டில் ஒரு சைக்கிளுக்கு ஆயிரம் ரூபாய் வரைக்கும் எதுக்கு அதிக விலை கேட்கப்படுகிறது.

இதுகுறித்து அமைச்சர் நிர்மல்குமார் தெளிவாக பதில்கூற ஏன் மறுக்கிறார்? என்று சமூக செயற்பாட்டார்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அமேசானில் ஹீரோ சைக்கிள் 5 ஆயிரத்து 907 ரூபாய்க்கு விற்கப்படும் நிலையில், வெளிச்சந்தையில் 7 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக விலை கொடுத்த விஜய் அரசு வாங்குகிறது. இலவச சைக்கிள் டெண்டரில் மெகா ஊழல் நடைபெற்றிருப்பதாக பரபரப்பு குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

த.வெ.க. அரசின்

ரூ.200-க்கு சிறப்புத்தொகுப்பு!

பொதுமக்கள் ஏமாற்றம்!

சென்னை, நவ.6-

கூட்டுறவு அங்காடிகளில் தமிழ்நாடு அரசு அறிவித்த 200 ரூபாய் சிறப்புத்தொகுப்பு கிடைக்கவில்லை என்று பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

தமிழகத்தில் கூட்டுறவு அங்காடிகளில் 200 ரூபாய் மதிப்பிலான சிறப்புத் தொகுப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பல கடைகளில் அந்தத் தொகுப்பு விநியோகிக்கப்படவில்லை. மேலும், நியாயவிலைக் கடைகள் வாயிலாக காய்கறிகள் வழங்கப்படும் எனவும் அரசு அறிவித்திருந்தது. ஆனால், அறிவிக்கப்பட்டபடி காய்கறிகளும் கடைகளுக்கு வரவில்லை என்றும் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். அரசின் அறிவிப்பை நம்பி நியாயவிலைக் கடைகளுக்குச் சென்ற மக்கள், சிறப்புத் தொகுப்பும் கிடைக்காமல், காய்கறிகளும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோல், சென்னை, அண்ணா நகரில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை அங்காடியில் சிறப்பு தொகுப்பு வழங்கும் திட்டத்தில் பல்வேறு குளறுபடிகள் நடந்தன. அமைச்சரின் நிகழ்ச்சியில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ராஜா பங்கேற்கவில்லை.

மேலும், சிறப்பு தொகுப்பில் எந்தெந்த பொருட்கள் வழங்கப்படுகிறது என்ற தகவலும் அமைச்சர் காந்திராஜுக்கு தெரியவில்லை. ஒரு சிலர் 10 பைகள் வரை வாங்கிச் செல்வதால் அனைவருக்கும் சிறப்பு தொகுப்பு கிடைப்பதில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.